**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் - 2022**

-------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (“பல்கலைக்கழகம்”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,081,685,748 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (SLPSAS) 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் அவை மேலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மதிப்பீட்டு பிழையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி ஒவ்வொரு மூன்று அல்லது ஐந்து வருடங்களுக்கும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தின் 05 காணிகள் 2011 இற்குப் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தின் 05 காணிகளை மீள்மதிப்பீடு செய்வதற்கு அரசாங்க விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிவிக்கப்பட்டு ள்ளதுடன் இந்தப் பணி எதிர்வரும் காலத்தில் பூர்த்தி செய்யப்படும். | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்டிடம் ரூபா 1,400,203 கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டடு 2022 மே 02 இல் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டது. | இந்த சொத்துக்கள் 2023 ஆம் ஆண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் வகைப்படுத்தலில் பதிவு செய்யப்படும். | பூர்த்தி செய்யப்பட்ட பணிகளை ஆண்டின் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் (நி.பி.)<br>------------------------- | | | |
| (i) நி.பி. 103(1) | 2021 ஆம் ஆண்டுக்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் 18 பிரிவுகளில் இருந்து 80 உருப்படிகள் காணாமல் போயுள்ளன என அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பட்ட இழப்பு குறித்து விளக்கம் கேட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களிடம் இருந்து பெறப்படும் பதில்களின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | இழப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களில் உள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நி.பி. 571 | ரூபா 18,403,762 தொகையான நிறுத்திவைத்தல் பணம் மற்றும் ரூபா 329,000 தொகையான மீளப்பெறக்கூடிய வைப்புக்கள் கணக்குகளில் 03 முதல் 10 ஆண்டுகள் வரை தீர்ப்பனவு செய்யப்படாமல் அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் இருந்தன. | இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ள உரிமை கோரப்படாத தொகைகளை வருமானத்திற்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை<br>------------------<br>XIX ஆம் அத்தியாயத்தின் 5.4 ஆம் பிரிவு | 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்கலைக்கழக விடுதிகளில் வசிக்கும் 37 கல்விசார் பதவியணியினர் மற்றும் 03 நிர்வாக உத்தியோகத்தர்களிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 20,130,410 தொகையை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் எந்தவொரு நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | பல்கலைக்கழக பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் துணைச்சட்டங்களில் கூறப்பட்டுள்ளவாறான தொகைகள், பல்கலைக்கழகத்தின் பதவியணியினர் விடுதிகளில் வசிக்கும் குத்தகைதாரர்களின் மாதாந்த சம்பளங்களில் இருந்து முறையாக அறவிடப்படுகிறது. | தாபவிதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பதவியணியினர் விடுதிகளில் வசிக்கும் குத்தகைதாரர்களிடமிருந்து நிலுவையாக உள்ள வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபனவிதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3 (1) ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதம் | கல்விசார் மற்றும் நூலக பதவியணியினரின் வருகை மற்றும் புறப்படுதல்கள் உறுதிப்படுத்தப்படாமல் மீளாய்வாண்டில் ரூபா 716,558,562 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | ஒரு பொதுவான நடைமுறையாக இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் புறப்படுதல்கள் பேணப்படுவதில்லை. | தாபனவிதிக் கோவை மற்றும் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய | இந்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் மூலம் பதவிநிலை | பல்கலைக்கழக ஊழியர்களுக்கான இந்தக் கடன்கள் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாதீட்டு சுற்றறிக்கையின் 03(X) ஆம் உட்பிரிவு (UGC இன் 2022 ஏப்ரல் 27 ஆம் திகதிய 04/2022 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கை கடிதம்) | உத்தியோகத்தர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல் இடைநிறுத்தப்பட்ட போதிலும் 12 பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு பல்கலைக்கழகம் ரூபா 2,556,943 கடன் வசதிகளை வழங்கியிருந்தது. | அறவீடுகள் அல்லது உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்தி செலுத்தப்பட வேண்டும். | பின்பற்றப்பட வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள் | | | |
| | 2022 பெப்ரவரி 23 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கைக் கடிதம் | 2022 ஆம் ஆண்டிற்கான அரச பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கு மாதாந்த எரிபொருள் வரம்பு 145 லீற்றராக வரையறுக்கப்பட்டுள்ளது. எனினும், 2022 ஜனவரி முதல் திசெம்பர் வரையிலான காலப்பகுதியின் போது அங்கீகரிக்கப்பட்ட வரம்புக்கு முரணாக ரூபா 579,687 பெறுமதியான 1,942 லீற்றர் எரிபொருள் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. | 2022 சனவரி முதல் 2022 யூன் வரையிலான மாதங்களுக்கான மேலதிக எரிபொருள் நுகர்வுக்கான அங்கீகாரம் UGC இற்கு அனுப்பப்பட்டுள்ளது, மேலும் அவர்கள் ஆவணங்களை 2022 ஒக்தோபரில் பல்கலைக்கழகத்திற்கு திருப்பி அனுப்பியிருந்தனர். மேலும், 2022 ஆகஸ்ட் முதல் 2022 திசெம்பர் வரையிலான மாதங்களுக்கான மேலதிக எரிபொருள் நுகர்வுக்காக அங்கீகாரம் பேரவையிலிருந்து பெறப்பட்டுள்ளது. | எரிபொருளைப் பயன்படுத்துவது தொடர்பாக சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஊ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | பல்கலைக்கழகம் 18 கல்விசார் பதவியணியினரை நியமித்து, நிதி அமைச்சின் விசேட அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 2,270,995 தொகையை செலுத்தியிருந்தது. | மேலும், 2022.09.23 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு பின்னர்தான் நியமனங்கள் தொடர்பான விபரங்களை UGC கோரியிருந்தது. எனினும், மேற்படி 18 நியமனங்களும் மேற்படி அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. | கல்விசார் பதவியணியினரை நியமிக்கும் போது சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 130,456,831 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 32,976,512 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 163,433,343 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டில் ரூபா 171,551,372 மொத்த வருமான வீழ்ச்சிக்கு எதிராக ரூபா 39,518,390 ஆக 23 சதவீதம் மொத்த வருமானம் அதிகரித்தமை மற்றும் முன்னைய ஆண்டிற்கு எதிராக ரூபா 202,951,732 ஆல் செயற்பாட்டு செலவினங்கள் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கான முக்கிய காரணங்களாகும்

### 2.2 முக்கிய செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான ஆளணி வேதனங்கள், வழங்கல்கள், ஒப்பந்த சேவைகள் மற்றும் சுய நிதியிடல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல்கலைக்கழகத்தின் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 30 சதவீதம் முதல் 303 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கலைமானி, வணிக நிர்வாகமானி மற்றும் வணிகமானி வெளிவாரி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான மாணவர்களின் வழிகாட்டி புத்தகத்தின் பிரகாரம் 03 கல்வி ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. எனினும், பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 05 முதல் 08 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியை பூர்த்தி செய்வதற்கு எடுத்திருந்தன. இதன் விளைவாக, இந்த தாமதம் மாணவர்களின் தொழில் மற்றும் வேலைவாய்ப்பை எதிர்மறையாக பாதிக்கும். | ஒரு தொகுதியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் விடைத்தாள்களை மதிப்பெண் இடுதலை பூர்த்தி செய்வதற்கு முக்கிய தாமதம் ஏற்பட்டது.<br><br>எனவே, குழு மதிப்பெண் இடுதலை அமலப்படுத்தி, மூன்று மாத காலப்பகுதியினுள் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு முடிவு செய்துள்ளோம். | பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 முதல் 2022 வரையிலான காலப்பகுதியில் 36 கல்விசார் பதவியணியினருக்கு ரூபா 15,307,313 கூட்டுமொத்த ஆராய்ச்சி மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், 36 கல்விசார் பதவியணியினரில், 18 கல்விசார் பதவியணியினர் 2023 மே 31 வரையிலும் தங்கள் ஆராய்ச்சியை பூர்த்தி செய்திருக்கவில்லை. | கோவிட் 19 பூட்டுதல்கள், நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை சூழ்நிலைகள் காரணமாக மானியம் பெற்றவர்களில் பெரும்பாலானோர் இன்னும் பூர்த்தி செய்யப்படாதுள்ளவற்றிற்கு நீடிப்புக்களைக் கோரினர், | குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஆராய்ச்சிப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கலை மற்றும் கலாச்சார பீடத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவில் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேரமுகப்பரீட்சை 2021 ஆகஸ்ட் 07 இல் நடைபெற்றது. அதன் பிரகாரம் பன்னிரண்டு (12) விண்ணப்பதாரர்களில் ஐந்து (05) தகுதியான விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு | அனைத்து வகை விரிவுரையாளர்களுக்கான ஆட்சேர்ப்பு UGC பணிப்புரை சுற்றறிக்கை இல. 721 ஆல் நிர்வகிக்கப்படுகிறது. எனவே, அவர்கள் தேவையான அனுபவத்துடன் துறையில் முதுகலை அல்லது PhD பட்டங்களைப் பெற்றிருந்தால். | இந்தப் பதவியை நியமிக்கும் போது UGC அறிவுறுத்தல் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் கீழ் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அழைக்கப்பட்டனர். அதன் பின்னர் 2 ஆம் வகுப்பு மேல்நிலைப் பிரிவில் விவசாயத்தில் BSc பட்டம் பெற்ற விண்ணப்பதாரர் ஒருவர் மேற்படி பதவிக்கு தெரிவுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டார். எனினும், இந்த விண்ணப்பதாரர் 1வது வகைக்கு பதிலாக 3வது வகையின் கீழ் தெரிவு செய்யப்பட்டார். பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பதாரரின் வகையை வேண்டுமென்றே தவறாகப் புரிந்துகொண்டதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக, இரண்டாம் நிலை விண்ணப்பதாரர், தங்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகக் கூறி, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். மனித உரிமைகள் ஆணைக்குழு முறைப்பாட்டை ஏற்று, இரண்டாம் நிலை விண்ணப்பதாரரை நியமிப்பதற்கு பரிந்துரைத்தது. எனினும், 2005 ஒக்தோபர் 05 ஆம் திகதிய 17/2005 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2006 பெப்ரவரி 23 ஆம் திகதிய 03/2006 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன சுற்றறிக்கை என்பவற்றில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் இருந்த போதிலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்த துணைவேந்தர் தவறியிருந்தார். | விரிவுரையாளருக்கு (தகுதிகாண்) தேவைப்படும் கல்வித் தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II மற்றும் I இற்குத் தகுதியுடையவர்களாவர்,<br><br>எனவே, தெரிவுக் குழு கூட்டாக மதிப்பெண்கள் அளித்து, தகைமை மற்றும் அனுபவத்தை கருத்தில் கொண்டு மிகவும் தகுதியான நபரை பொருளாதாரத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I பதவிக்கு பரிந்துரைத்ததுடன் அது SEUSL பேரவையால் அங்கீகரிக்கப்பட்டது. மேலும், இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை பல்கலைக்கழகம் கவனத்தில் எடுத்துள்ளது. மேலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பொருளாதாரத்தில் விரிவுரையாளர் நியமனத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற வழக்கும் இறுதித் தீர்மானத்திற்காக நிலுவையாக உள்ளது. (வழக்கு இல. - CA (writ)) விண்ணப்ப இல. 261/2022) |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 முதல் 2019 வரையான காலப்பகுதியில் ரூபா 24,397,000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு ஆய்வுகூட உபகரணங்கள் 4 ஆண்டுகளுக்கும் மேலாக விளைவற்றிருந்தன. | எதிர்காலத்தில் இதுபோன்ற தாமதங்கள் மற்றும் விளைவற்ற சூழ்நிலைகளைத் தடுப்பதற்கு கடுமையான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படும். | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துவதற்கும், எதிர்காலத்தில் விளைவற்ற சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்கும் பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மல்வத்தையில் உள்ள விவசாய தொழில்நுட்ப பூங்காவின் (19 ஒதுக்கப்பட்ட வேலை அலகுகள்) உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான ஒப்பந்தம் 2021 மார்ச் 29 இல் ஒப்பந்ததாரருக்கு ரூபா 138,444,958 (வற் இல்லாமல்) வழங்கப்பட்டதுடன் பணிகள் 2022 யூன் 28 இல் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக 45 சதவீத பணிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 05 அலகுகளின் ரூபா 39,390,993 கூட்டுமொத்தமான பணிகள் 2023 மே 31 வரையிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | மாணவர்களின் ஆராய்ச்சி மற்றும் கல்வி நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக செயற்திட்டத்தை மீள்மதிப்பீடு செய்து, புதிய ஒப்பந்தத்திற்கான புதிய கேள்வி செயன்முறையைத் தொடங்கலாம்.<br><br>தொற்றுநோய் மற்றும் சீரற்ற வானிலை போன்ற ஒப்பந்ததாரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை கணிசமாக பாதித்துள்ளன என்பதை ஒப்புக்கொள்வது முக்கியமானதாகும். | நிர்மாணப் பணிகளை மேலதிக தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |